சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை– மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் மற்றும் இலங்கை அகதிகளுக்கான மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் பெற்று வரும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத்தினை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்துதல் – 2022–2023ஆம் ஆண்டில் ரூ.65,89,72,500/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை(சந6(1))த் துறை

அரசாணை (நிலை) எண்:86

நாள் 31.12.2022
திருவள்ளுவராண்டு 2053
சுபகிருது, மார்கழி 16

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந6(1)) துறை, நாள் 17.05.2011.

மேலும் படிக்க:

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு, நாள் 03.12.2022
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.வரு தணி. 5(1)/18187/2021, நாள் 06.12.2022

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத்தினை ரூ.500/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி மே,2011 முதல் நடைமுறைப்படுத்தவும் (ஜுன்,2011–ல் வழங்குவதற்கும்) ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அறிவிப்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவில், பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

"வருவாய்த் துறை மூலம் ஓய்வூதியம் பெற்று வரும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 4 இலட்சத்து 39 ஆயிரத்து 315 நபர்களுக்கு, அவர்கள் தற்போது பெற்று வரும் ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக வரும் ஜனவரி 1–ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம், அரசுக்கு ஆண்டுக்கு 263 கோடியே 56 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்."

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், தமிழகத்தில் தற்போது அரசு உதவித்தொகை பெற்று வரும் இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் இலங்கை அகதிகளுக்கான மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு, சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் மற்றும் இலங்கை அகதிகளுக்கான மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் பெற்று வரும் கண்பார்வையற்ற மாற்றுத்திறனுடையோர் உள்ளிட்ட அனைத்து மாற்றுத்திறனுடையோர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியத்தினை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்தி வழங்கவும், டிசம்பர், 2022 முதல் நடைமுறைப்படுத்தவும், ஜனவரி, 2023ல் வழங்குவதற்கு முடிவு செய்து ரூ.65,89,72,500/–(ரூபாய் அறுபத்து ஐந்து கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் :–

| வ. எண் | கணக்குத் தலைப்பு | ரூபாய் (ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாநிலச் செலவினங்கள் UB இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 102 UB 327 05) | 23570 |
| 2. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாநிலச் செலவினங்கள் UQ இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் மாநில அரசின் பங்கு – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 102 UQ 327 05) | 47140 |

| | | |
|---|---|---|
| 3. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 793 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி மத்திய அரசின் திட்டங்கள் UB சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 793 UB 327 05) | 6851 |
| 4. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 793 ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டத்திற்கு மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி மாநிலச் செலவினங்கள் UF சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் – மாநில அரசின் பங்கு – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 793 UF 327 05) | 13701 |
| 5. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 794 பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி மத்திய அரசு திட்டங்கள் UB இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 794 UB 327 05) | 240 |
| 6. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 794 பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி மத்திய அரசு திட்டங்கள் UF இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் – மாநில அரசின் பங்கு – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 794 UF 327 05) | 479 |
| 7. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாநிலச் செலவினங்கள் JB சமூகப் பாதுகாப்பு வளையம் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை–327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 102 JB 327 05) | 445106 |
| 8. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மாநிலச் செலவினங்கள் JF சமூகப் பாதுகாப்பு வளையம் சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 789 JF 327 05) | 117054 |

| | | |
|---|---|---|
| 9. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் மாநிலச் செலவினங்கள் JM சமூகப் பாதுகாப்பு வளையம் – மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 796 JM 327 05) | 4501 |
| 10. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் மாநிலச் செலவினங்கள் JJ முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களில் ஆதரவற்ற ஊனமுற்றோருக்கான ஓய்வூதியத்திட்டம் – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 102 JJ 327 05) | 331 |
| | மொத்தம் | 658973 |

6. மேலும், 2023–2024ஆம் நிதியாண்டிலிருந்து மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதிய திட்டத்திற்கு மேம்படுத்தபட்ட(enhanced) ரூ.500/– ஐ பயனாளர்களுக்கு கீழ்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் என, அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | கணக்குத் தலைப்பு |
|---|---|
| 1. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – மாநிலச் செலவினங்கள் – BL இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் (Top–up) – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 102 BL 327 05) |
| 2. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – BA சிறப்பு கூறுகள் திட்டத்தின் கீழ் இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் (Top–up) – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 789 BA 327 05) |
| 3. | 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் BA இந்திராகாந்தி தேசிய ஊனமுற்றோர் ஓய்வூதிய திட்டம் (Top–up) – 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (IFHRMS DPC 2235 60 796 BA 327 05) |

7. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.65,89,72,500/–, 2022–2023ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி4–ல்

ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022-2023ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2022-2023ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி(வருவாய்/வ.செ.பொ.I) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அதன் அலுவல் சார்பற்ற எண்.4670/FS/P/நிதி(வருவாய்)/2022, நாள் 31.12.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2190 (இரண்டாயிரத்து நூற்று தொண்ணூறு) ன்படி வெளியிடப்படுகிறது.

( IFHRMS ASL No.2022122190)

//ஆளுநரின் ஆணைப்படி//

சுன்சோங்கம் ஜடக் சிரு
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சென்னை – 9,
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை – 5
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/செயலாளர்,
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9,
சமூக நல இயக்குநர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை –5 வழியாக)
மாநில முதன்மை கணக்காயர், (A&E) சென்னை–18.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை –5 வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சென்னை –5 வழியாக).

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் IV, முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(ச.ந – ம.உ) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,
சென்னை–9.

நிதி (வருவாய்/ சமூக நலன் /வ.செ.பொ.I/2 /வ.வ-I) துறை,
சென்னை-9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந2) துறை,
சென்னை-9.
இருப்பிடத் தணிக்கை அலுவலர்,
மாநில கணக்காயர் அலுவலகம்,
சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/12/22
பிரிவு அலுவலர்
31.12.22